முதற்கட்டமாக, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1,500 ஏக்கர்; வேலூர் மாவட்டம், காட்ராம்பாக்கத்தில் 2,000 ஏக்கர்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் 4,000 ஏக்கர் பரப்பளவில் புதிய தயாரிப்பு மண்டலங்கள் நிறுவப்படும். இந்தப் புதிய மண்டலங்களை நிறுவி மேலாண்மை செய்வதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (Special Purpose Vehicle) அமைக்கப்படும்.

எண்ணூர் துறைமுகப் பகுதியின் முக்கியத்துவத்தைக் கருதி, அங்குள்ள சாலைகளின் தரம் மேம்படுத்தப்படும் என்றும், ஓரகடம் பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதிப் பொருட்களை எளிதில் அனுப்ப வசதியாக, வடக்குத் துறைமுக இணைப்புச் சாலை அமைக்கப்படும் என்றும் நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். புதிதாக உருவாகும் இந்தச் சாலைகளுக்கு அருகில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கனரக பொறியியல் தொழிற்சாலைகளுக்கான ஒரு பெரு மையம், அதாவது Hub ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடனும், புதிய தொழில் முனைவோருக்குத் தேவையான நிலங்களை உட்கட்டமைப்பு வசதிகளோடு வழங்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், அதாவது சிப்காட் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தற்போது தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் பெரும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்களை விரைந்து அளிக்க வசதியாக சுமார் 20,000 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் தொழிற்பூங்காக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 100 கோடி ரூபாய் நிதியுடன் "தொழில் கட்டமைப்பு தொகுப்பு நிதி" ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகுப்பு நிதியை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 80 கோடி ரூபாயும், அரசு 20 கோடி ரூபாயும் நிதி உதவி அளிக்கும். இந்த நிதியின்மூலம், சிப்காட் தொழிற்பூங்கா அமைந்துள்ள பகுதிகளில், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையுடன் இணைப்பதற்கான சாலைகள்

அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், ஏற்கெனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்தி அகலப்படுத்துதல், மாசுக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் அல்லது தொழிற்சாலைகளுக்குத் தேவையான புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

7. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை அதிகரித்தல், நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நிதிபதிகளுக்கான குடியிருப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் தொழில் கொள்கைகள் வகுத்தல்–முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்தியா கிராமங்களிலே வாழ்கிறது' என்றார் அண்ணல் காந்தியடிகள். கிராமங்கள்தான் பண்பாட்டை, பாரம்பரியத்தை, மண்ணின் தன்மையை, வளத்தை, பெருமையைக் காப்பாற்றுகிற இன்றைய வாழ் நிலங்களாக இருந்து கொண்டிருக்கின்றன என்பது நிதர்சனம். அந்த கிராமியப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிற வகையிலே, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமியப் பொருளாதாரம், பெரும் தொழில் வளர்ச்சி, அதற்கு மேலே நீதி இந்த மூன்றையும் இணைத்து, முப்பெரும் தேவியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) கேட்கிறவர்களும் வியந்து, திணறிப் போகிற அளவிற்கு படிப்படியாய், படிப்படியாய் 100 கோடியிலே தொடங்கி, 10,000 கோடி வரையிலே பெரும் மதிப்பீடுகளை (மேசையைத் தட்டும் ஒலி) படிப்படியாக, படிப்படியாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.*

நீதிமன்றக் கட்டடங்கள் செழுமை பெற்று, நீதி நிலைநாட்டப்பட வேண்டும். நீதி தேவதைக்குப் பொதுவாகவே கண்களைக் கட்டிவிடுவார்கள். காரணம், பாரபட்சம் வந்துவிடக் கூடாது; சார்புத் தன்மை வந்துவிடக் கூடாது என்று கண்களைக் கட்டித்தான் நாம் நீதி தேவதைக்குச் சிலை வடித்துப் பார்த்திருக்கின்றோம். நம்முடைய நடமாடும் நீதி தேவதைக்குக் கருப்புக் கண்ணாடி தேவையில்லை; (மேசையைத் தட்டும் ஒலி)

கருப்புத் திரை தேவையில்லை. என் பார்வை இயல்பாகவே பாரபட்சம் அற்றது; என்னுள் எதற்கும் பாரபட்சம் கிடையாது என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) நடமாடும் நீதி தேவதையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குடிசைத் தொழிலை மேம்படுத்துவதோடு, நீதிமன்றங்களை செழுமைப்படுத்துவதோடு, பெரும் தொழிலுக்கு நம்முடைய தமிழக தொழில் வளர்ச்சித் துறை, 'சிட்கோ', 'டிட்கோ' ஆகியவற்றின்மூலம் நிரந்தரமாய், தமிழ் மாநிலம், முன்னணி மாநிலமாக இந்தியாவிலே மட்டுமல்ல; உலகத்திலேயே இன்னும் 10 ஆண்டு காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் பார்வையிலே நிமிர்ந்த ஒரு மாநிலமாய், எதிலும் நிறைவைப் பெற்ற மாநிலமாய் உருவாக்கியே தீருவேன் என்று 21 ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் இரும்பு மங்கை (மேசையைத் தட்டும் ஒலி) என்று, உலகமே வியக்கிற அளவிற்கு அந்தப் பாராட்டைப் பெறுகிற பெருமைக்கு இன்றைக்கு வித்திட்டு இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த சீர்மிகு திட்டங்களை வாழ்த்தி, வரவேற்று அமைகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பெருக்கத்தை மனதிலே வைத்து, துறைதோறும் புரட்சிகரமான வளர்ச்சித் திட்டங்களை அறிவித்து வருகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறு தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்காக சுமார் 20 திட்டங்களுக்கு 136 கோடி ரூபாயை அள்ளித் தந்து 10 உதவி வளர்ச்சி அலுவலர் பணியிடங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.*

அச்சுத் துறை வளர்ச்சிக்கு 3 கோடி ரூபாயைத் தந்துதவி, மாவட்டத் தொழில் மையங்களை நவீனப்படுத்தி, புதிய கட்டடம் கட்டித் தந்து, அதற்காக 50 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ளித் தந்திருக்கிறார்கள்.

நீதித் துறையிலே நீதிமன்றங்கள் மக்களுக்கு அவசர அவசியமானதாக இருக்கின்றன. மக்கள் நீதி பெறுவதற்கும், ஜனநாயகத்தை, தனி மனித உரிமையைப் பேணிப் பாதுகாப்பதிலே

முக்கியமான துறையாகவும் இருக்கிற நீதித் துறைக்கு, குறிப்பாக நம்முடைய தலைநகரத்திலே சென்னை சைதாப்பேட்டை, எழும்பூர், சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றங்களுக்கு 27 கோடி ரூபாயை அள்ளித் தந்து, அத்துறையின் மேம்பாட்டுக்காக உதவியிருக்கிறார்கள். மேலும், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், நீதிபதிகளின் குடியிருப்புகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

தொழில் வளர்ச்சிக்குப் புதிய முதலீடுகளை ஈர்த்து, பெருகிவரும் எரிசக்தித் தேவையை மனதிலே வைத்து, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஒதுக்கி, அதற்காக நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அருகில் இருக்கிற மாநிலங்களிலிருந்தெல்லாம் அந்த எரிசக்தி குழாய் வழி, சாலை வழிப் பாதையை நிர்மாணித்து அதற்காக 1,000 கோடி ரூபாயைத் தந்து, வீட்டு எரிபொருள்கூட தடையில்லாமல் கிடைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய சிந்தனையோடு (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால சந்ததியர்கள் எப்படிப்பட்ட தேவையையும் தங்குதடையில்லாமல் பெறவேண்டுமென்பதற்காக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து ஓராண்டு முடிவதற்குள்ளாகவே தொலைநோக்குத் திட்டம், 2023 என்கின்ற இந்தத் திட்டத்தை இப்பொழுதே அறிமுகம் செய்வதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளித் தந்திருக்கிறார்கள்.

தென் மாவட்டங்களிலே சுமார் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் மிதவை எரிவாயு முனையத்தை இந்தியாவில் இதுவரை வேறு எங்கும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நிதி தந்திருக்கிறார்கள். அதுபோன்று தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு, தூத்துக்குடியிலே 1,500 ஏக்கர் நிலம், ஓசூரிலே 4,000 ஏக்கர் நிலம் தந்து, அதனுடைய சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைத் தந்து உதவியிருப்பது, அதற்காக இணைப்புச் சாலைகளை மேம்படுத்தித் தந்திருப்பது உள்ளிட்டவற்றிற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை அள்ளித் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலைவாய்ப்பு, உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே, சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை தமிழகத்தில் முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று, கிட்டத்தட்ட 136 கோடி ரூபாயை ஒதுக்கி அதற்கான அனைத்துத் திட்டங்களையும் தமிழகத்திலே கொண்டு வந்திருக்கின்ற நிலையைப் பார்க்கும்பொழுது, உலகளவில் தமிழகத்தினுடைய பொருட்களை எடுத்துச் செல்கின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அதேபோல், தொழில் வளர்ச்சியில் தமிழகம், முதலீட்டாளர்களை ஈர்க்கின்ற வகையிலே, தமிழகத்திற்குப் பெரிய பெரிய தொழில்களையெல்லாம் கொண்டுவந்து உலகமயமாக்குகின்ற இந்த நிலையை--தமிழகத்தை உலகமயமாக்குகின்ற, அதில் போட்டி போடுகின்ற நிலைமையை- உருவாக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட காலக்கட்டங்களில் திரவ நிலை எரிவாயு தேவைப்படுகின்றது, அது இருந்தால்தான் செய்ய முடியும் என்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு சிந்தித்து, அதற்கு, தொலைநோக்குச் சிந்தனையோடு இவ்வளவு திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

அதேபோன்று, தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னேற்றப் பாதைக்குச் செல்ல வேண்டும். தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்ற சிந்தனையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை உண்மையிலேயே மனமாரப் பாராட்ட வேண்டும்.

நீதித் துறையில் இருக்கின்ற நீதிமன்றங்கள் பழமையான நீதிமன்றங்களாக இருக்கின்றன. அதை அப்படியே பழுதுபார்த்துச் செப்பனிட வேண்டுமென்றும், ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டித் தர வேண்டுமென்றும், அதற்கு 27 கோடி ரூபாயை ஒதுக்கி, நீதிபதிகளின் குடியிருப்புகளை மேம்படுத்துகின்ற வகையிலே கட்டித் தந்திருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, அதாவது இந்தத் தமிழகத்தை எப்படியெல்லாம் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று 24 மணி நேரமும் சிந்தித்து, இந்தத் தமிழக மக்களுக்காகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமாரப் பாராட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)